முரசொலி
பாசறை
சென்னை 13.10.2023

# திராவிட சினிமா

27

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



## ‘முன்னத்தி ஏர்’ ஆசைத்தம்பி!

படம் - உதவி : ஞானம்



திராவிட சினிமா குறித்த ஆய்வில், இதுவரை அதன் முதன்மைப் பங்களிப்பாளர்களும் திசை வழிகாட்டிகளுமான பேரறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய திரைக்காவியங்கள் தொடங்கி, அவர் வழி தொடர்ந்து திராவிடச் சினிமாவை அதன் சாத்தியங்களின் எல்லைவரை வளர்த்தெடுத்த கலைஞர் அவர்களின் திரை ஓவியங்களைத் தொடர்ந்தோம்.

கலைஞர் திரைப்படங்களைத் தொடர்ந்த நம் பயணம், 1967-ஆம் ஆண்டை எட்டிவிட்டது. இடைப்பட்ட காலத்தில் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய ‘நாம்’ (1953), ‘தாயில்லாப் பிள்ளை’ (1961), ‘மறக்க முடியுமா?’ (1966) ஆகிய திரைப்படங்களை இணையதளங்களில் கண்டடைய இயலவில்லை. இளவயது முதல் என் நினைவில் நிலைத்து நின்ற கலைஞரின் ‘காகித ஓடம் கடலலை மீது போவது போலே மூவரும் போவோம்’ எனும் காவிய சோகத்தை உருவாக்கிய பாடலைக் கொண்ட திரைப்படம் ‘மறக்க முடியுமா’ இழப்பும் காவிய சோகம்தான்.




நிற்க, திராவிட சினிமாவில் பங்களிப்பு செய்த ஆளுமைகளில் சிலரையேனும் நினைவில் இருத்துவது ஒரு ஆய்வுமுறைமையின் நேர்மையெனக் கருதுகிறேன். அந்த வகையில், முதலாவதாக, இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் பங்களிப்புக் குறித்துப் பார்க்கலாம்.

### முன்னத்தி ஏரின் இதழ்ப் பணி

ஆசைத்தம்பி அவர்கள் திராவிடர் கழகத்தில் தொடங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் வரை தொடர்ந்தவர். கலைஞர், கண்ணதாசன் ஆகியோருடன் அதே காலவெளியில் (1948-1952) மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் கதை இலாகாவில் பணியாற்றியவர். அவரது திரையுலகப் பங்களிப்பு இரண்டு வகையானது. ஒன்று, திரைத்துறையில் நேரடியாகப் பணி செய்தது. இரண்டாவது, **‘திராவிடச் சினிமா’** என்ற பெயரிலேயே 1955-ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை திரைப் பத்திரிக்கை நடத்தியவர் என்பது. இந்த இரண்டாவது பங்களிப்புக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த அன்புத் தம்பி முனைவர் பாவேந்தனுடன் இணைந்து, **‘திராவிட சினிமா’** நூல் தொகுப்பினை உருவாக்கிய போது அந்த ‘திராவிட சினிமா’ எனும் பெயரை ஆசைத்தம்பி அவர்கள் அதே பெயரில் நடத்திய இதழிலிருந்தே நன்றியுடன் இரவல் பெற்றோம்.

இந்த முன்னத்தி ஏர் செய்த இதழ்ப் பணி மகத்தானது. இன்று ‘திராவிட சினிமா‘ என்று திராவிட இயக்கத்தவர் உருவாக்கிய திரைப்படங்களை அடையாளம் காண்பதும், ஆய்வுப் பொருண்மையாக்குவதும் பெரிதல்ல. ஆனால், அந்தத் திரைப்படங்கள் உருப்பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே அவற்றைத் ‘திராவிட சினிமா’ என வகைமைப் படுத்தியது பெருமிதத்துக்குரியதும், அரிதானதுமாகும். அன்றைய நாளில் **தேசிய சினிமா, தெய்வீக சினிமா** எனும் வகைமைகள் அடையாளம் காணப்படவோ பேசப்படவோ இல்லை.

### திசை வழிகாட்டிய தலையங்கம்

ஆசைத்தம்பியின் திராவிட சினிமா குறித்த அரசியல் புரிதலுக்கு அவரது 05.09.1956 தேதி இதழின் தலையங்கமே சாட்சி. அந்தத் தலையங்கம் இப்படிச் சொல்கிறது:

“ஒரு நாளில் திரைத்துறையின் அத்தனை துறைகளையும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்திருந்தனர். ஆனால், இப்போதோ ‘சுயமரியாதைக் கட்சியின் இடைவிடாத முயற்சியால் காலம் மாறியது. திரைப்பட உலகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராணப் படங்கள் பார்ப்பாரற்று இருக்கும் பரிதாபநிலை ஏற்பட்டது.

கதை எழுதவா? வசனம் அமைக்கவா? பாடல் எழுதவா? பாட்டுப் பாடவா? ஆடல் அமைக்கவா? ஆடவா? நடிக்கவா? ஆகிய அத்தனையிலும் பிராமணரல்லாத திராவிடர்கள் திறமையால் மேலோங்கி வந்துவிட்டனர்!.

பத்திரிக்கைத் துறையில்கூட ஆரிய ஆனந்த விகடனுக்கு நிகர் வேறு கிடையாது என்று இருந்த இறுமாப்பான நிலையைத் திராவிட ‘குமுதம்’ சுக்குநூறாக நொறுக்கி விட்டது. இதன் பேரில் மனம் புழுங்கி அடிவயிறு எரிய, பொறாமை நெஞ்சை அறுக்க ஆனந்த விகடன், திராவிட நடிகர்களான எம்.ஜி.ராமச்சந்திரன் - சிவாஜி கணேசன் இடையே ‘இவர்கள் சந்தித்தால்’ எனும் பெயரில் ‘கற்பனைக் கதை’ எழுதி, அதில் ‘பார்ப்பனச் சிண்டு முடியும்’ வேலையைச் செய்திருக்கிறது. இப்படிக் கழிசடைத்தனமாக எழுதுவதன் மூலம் முன்போல விலைபோகாத தன் சரக்கின் விற்பனையையும் உயர்த்திட முயற்சிக்கிறது....

விகடரே வேண்டாம் இந்தக் குரங்குப் புத்தி. இரட்டைக் குழந்தை படக் கம்பெனி உம்மிடம் இருக்கிறதே! உம்மால் ஒரு சிவாஜியையோ, எம்.ஜி.ஆரையோ உருவாக்க முடிந்திருக்கிறதா? இல்லை ஒரு இளங்கோவனைப் போல, ஒரு கலைஞர் கருணாநிதியைப் போல ஒரே ஒரு வசன கர்த்தாவை உற்பத்தி செய்ய முடிந்ததா?”.

இந்தத் தலையங்கம் நமக்கு விளக்கும் செய்தி, ‘திராவிட சினிமா’ அது உருப்பெறும் காலத்திலேயே, பல்வேறு திரைத்துறை சார்ந்த சேவைகளில் ஈடுபட்டிருந்தோர், ஒரே வேளையில் அவற்றைத் தமது சொந்த ஆக்க முயற்சியாகவும், பொதுவான திராவிடத் திசைவழிப் பயணத்தின் பகுதியாகவும் கவனத்தில் கொண்டே செயல்படுத்தினர் என்பதே.

### ஒரே குலம் ஒன்றே நீதி

திரைத்துறை ஆக்கப் பணியில் நேரடிப் பங்களிப்பு என்ற வகையில் ஆசைத்தம்பி அவர்களது பெயர் சொல்லும் படைப்புச் சொற்பமானதே. 1951 ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில், டி.ஆர்.சுந்தரம் இயக்கத்தில் எம்.ஜி.ஆர், அஞ்சலிதேவி, நம்பியார், நாகையா, டி.பி.முத்துலட்சுமி நடிப்பில் உருவான வெற்றிப் படமான **‘சர்வாதிகாரி’** படத்தின் வசனகர்த்தா அவர்தான்.

**இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள்.**

போரால் நாட்டின் பொருளாதாரம் அழிந்து அல்லலுறும் மக்களின் துயர் போக்க ராணுவத்தைக் கலைக்கத் திட்டமிடும் படைத் தளபதிக்கும், பொம்மை அரசனை முற்றாக வீழ்த்தி சர்வாதிகாரி ஆக மீண்டும் போருக்குத் தள்ளும் அமைச்சர் ஆகியோருக்குமான அரசியலே கதைக் களம்.

இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள். இறுதியான அறிவிப்பு, ‘இனி நாட்டில் சாதி இருக்காது. ஒரே நீதியிருக்கும். சர்வாதிகாரம் இருக்காது. சமத்துவம் இருக்கும். குலம் ஒன்றுதான். கடவுளும் அப்படியே. கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகும்‘ என்கிறது.

...படம் விரியும்

---

## எளிய மக்களின் குரல் உலகின் காதுகளை எட்டாது!




இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், இரண்டு தரப்பிலும் நிகழும் தாக்குதல்களால் மிகப்பெரிய அளவில் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த நிலப்பரப்புக்கு உரிமை கொண்டவர்கள் யார் என்பதில் பெரும் சிக்கல் நீடிக்கும் நிலையில், உலக நாடுகள் இஸ்ரேல் பக்கமும், பாலஸ்தீனம் பக்கமும் அணி சேர்வது சிக்கலின் அடுத்த கட்ட அபாயத்துக்கு வழி வகுக்கின்றன. இந்த நிலையில் இஸ்ரேல்- பாலஸ்தீனப் பிரச்சினையில் பல பக்கங்களை அலசுகிறது **‘நைல் முதல் ஃபுராத் வரை’** என்கிற இந்த நூல். **‘சமரசம்’** இதழில் வெளியானபோதே வரவேற்பைப் பெற்ற இந்தக் கட்டுரைகளைத் ‘துருவம் பதிப்பகம்’ நூலாக வெளியிட்டுள்ளது.

**புதுமடம் ஹலீம்** எழுதிய இந்த நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள எழுத்தாளர் முத்துகிருஷ்ணன். “பாலஸ்தீனத்தில் தங்களின் கட்டை விரலை எடுத்து வைத்த யூதர்கள் எப்படி மெல்ல மெல்ல தங்களின் கால், கை, உடல் என மொத்த நிலத்தையும் ஆக்கிரமித்து அந்த நிலத்தின் பூர்வக்குடியான பாலஸ்தீன மக்களை அதனைச் சுற்றிய நாடுகளுக்கு விரட்டி அகதிகளாக மாற்றியிருக்கிறார்கள், சொந்த நாட்டில் எஞ்சி வாழுகிறவர்களும் அகதிகளாகவே உரிமையற்றவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாகவே வாழ்கிறார்கள் என்பதை உணர வைக்கும் நூல்.

இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கும் நேரம் என் மனதில் அரபு நாடுகள், மத்தியத் தரைக்கடல் நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமையின்மைதான் இந்தப் பிரச்சினை இத்தனை பெரும் வரலாற்று விஸ்வரூபம் எடுப்பதற்கு வழிவகுத்துள்ளது. இஸ்லாமிய நாடுகள் முழுமையிலும் இருக்கும் குடிமைச் சமூகத்தில் ஜனநாயகம் வராத வரை பாலஸ்தீனத்திற்கு ஆதரவான எளிய மக்களின் குரல் அங்கிருந்து ஒரு போதும் வெளி உலகின் காதுகளை எட்டாது” எனக் குறிப்பிடுகிறார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### சலவை நோட்டு சால்வை!

நெருக்கடி நிலை அமலிலிருந்த காலத்தில், வெட்ட வெளியில் பொதுக்கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கழக மூத்த தலைவர்கள் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு மிசா கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இப்படியான காலகட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களை 1977-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்துக்கு அழைத்து கிருஷ்ணா திரையரங்கத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். நெருக்கடி நிறைந்த சூழலிலும் தொண்டர்களை உற்சாகமூட்டும் வகையில் அவரது பேச்சு அமைந்திருந்தது. அந்தச் சமயத்தில் மாவட்டப் பிரதிநிதியாக இருந்த நான் தலைவர் அவர்களுக்குப் பண நோட்டுக்கள் கொண்ட சால்வையை அணிவித்து மகிழ்ந்தேன்.



முகமது சகி

**-தி.அ. முகமது சகி,**
**மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்,**
**அவைத் தலைவர், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்


### தம்பிக்குக் கடிதம்!

**1955-ஆம் ஆண்டு, மே மாதம் 8-ஆம் தேதியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழில் ‘தம்பிக்குக் கடிதம்’ எழுதத் தொடங்கினார் பேரறிஞர் அண்ணா. தம் தோழர்களை தம்பிகளாகக் கருதி, அவர்களுக்குப் பல துறைகளில் பயிற்சி அளிக்கவும், கட்சியை வளர்க்கவும் அண்ணா ‘கடித இலக்கியம்’ படைத்தார். 15 ஆண்டுகளில் எழுதப்பட்ட 290 கடிதங்களில் அண்ணா மிகப்பெரிய அரசியல் எழுச்சியை ஏற்படுத்தினார். இடையில் சில ஆண்டுகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள் ‘ஹோம்லேண்ட்’, ‘ஹோம் ரூல்’ இதழ்களிலும் வெளிவந்தன.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

268




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131